இரண்டாமிடத்தையும், முதுஅறிவியல் முதலாமாண்டு கணிதத்துறை மாணவி சி. சினேகா மூன்றாமிடத்தையும் பெற்றனர்.

26.01.2020 குடியரசு தின விழாவில் மாணவிகளுக்கும், பேராசிரியர்களுக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டன.

12.02.2020 அன்று அன்பகம் ஆதரவற்றோர் இல்லம் சென்று அங்குள்ள 300 மாற்று திறனாளி குழந்தைகளுக்கும் பெரியோர்களுக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டன.

07.02.2020 அன்று சமூக சேவைக்குழுவும் இளைஞர் செஞ்சிலுவைச் சங்கமும் இணைந்து மனஅழுத்தம் இல்லாமல் தேர்வு எழுதுவது குறித்த கருத்தரங்கம் நடத்தியது. இக்கருத்தரங்கில் மயிலாடுதுறை வாழும் கலை மைய யோகா ஆசிரியர் திருமதி சுமதி சுரேஷ் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு, மன பயிற்சியும் உடற்பயிற்சியும் அளித்தார்.

நம் கல்லூரியில் இளங்கலை இளமறிவியல் மூன்றாமாண்டு பயிலும், முதுகலை முதுஅறிவியல் இரண்டாமாண்டு பயிலும் மாணவியர்களில் பொருளாதாரத்தில் மிகவும் பின் தங்கிய துறைக்கு இரு மாணவியருக்கு சமூக சேவைக்குழு சார்பாக கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டன.

2019 – 2020 ஆம் கல்வியாண்டின் சமூக சேவைக்குழுவின் சேவை திட்டங்களுக்கு ஒத்துழைப்பு நல்கிய முதல்வர், மூத்த பேராசிரியர்கள், துறைத்தலைவர்கள், பேராசிரிய பெருமக்கள் மாணவிகள் அனைவருக்கும் பொறுப்பாசிரியர் முறையில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.